மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 123/23 |
| பெயர் | : | ஆனந்தராஜ்(PW2) |
| த/பெ. | : | முத்துமாரியப்பன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the19th day of January 2024

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்னுடை தாத்தா சித்திரவேலின் தகப்பனார் பெயர் கருப்பசாமி என்ற கருப்பனன்.கருப்பசாமி என்ற கருப்பனன் என்பதை காட்டுவதற்குரிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா. ஆவணம் 5 கருப்பசாமி குமாரர் சித்திரவேல் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுடைய வழக்கில் கருப்பனன் என்ற கருப்பசாமி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான் அவருக்கு இரண்டு பெயர்கள் உண்டு.என்னுடைய தாயார் வயலட் பிலோமினா வெள்ளைசாமி என்பவரை திருமணம் செய்திருந்தார் என்றால் கேள்விப்பட்டுள்ளேன்.

2)வெள்ளைசாமிக்கும் பிலோமினாவிற்கும் பிறந்தவர் 2 வது வாதி கிரேஸ் மேரி என்றால் அவர்களாக அவ்வாறு எழுதியுள்ளார்கள் அது பற்றி எனக்கு தெரியாது.வழக்குரையில் கிரேஸ்மேரி 2 வாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.வெள்ளைசாமிக்கும் வயலட்பிலோமினாவிற்கும் நீதிமன்றம் மூலமி விவகாரத்து பெறப்பட்டதா என்றால் திருமண ஆனதே எனக்கு தெரியாது,குல வழக்கம் படி விவகாரத்து பெற்றதாக கேள்விபட்டுள்ளேன்.

3) என் தகப்பனார் 1 வது வாதி முத்துமாரியப்பனுக்கும் எனது தாயார் வயலட் பிலோமினாவிற்கும் திருமணம் ஆனதை காட்டக்கூடிய திருமண பதிவு சான்றிதழோ திருமண பத்திரிக்கையோ திருமண கோலத்தில் இருக்கக்கூடிய புகைப்படமோ உள்ளதா என்றால் புகைப்படம் உள்ளது திருமண கோலத்தில் இருக்கும் புகைப்படம் இ,ல்லை. மற்ற ஆவணங்கள் அந்த காலத்தில் வீட்டில் வைத்து திருமணம் செய்ததால் இல்லை.

4) வெள்ளைசாமியுடன் செய்து கொண்ட திருமணம் நிலுவையில் இருக்கும் பொழுதே சட்டத்திற்கு புறம்பாக வயலட்பிலோமினா 1 வது வாதியுடன் சேர்ந்து

வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல.அதனால் என் தகப்பனார் வயலட் பிலோமினாவிற்கு சட்டப்படி வாரிசாக முடியாது என்றால் சரியல்ல.என் தாயார் வயலட் பிலோமினாவிற்கு வாரிசு சான்றிதழ் வைத்துள்ளேன்.அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன்.

5) என் தகப்பனார் 1 வது வாதி வயலட் பிலோமினாவிற்கு வாரிசு கிடையாது அதே போல் வாரிசு சான்றிதழ் கைவசம் கிடையாது என்றால் சரியல்ல.வாரிசு சான்றிதழ் எங்களுக்கு விரோதமாக இருப்பதால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.1976 லேயே தகுந்த சீர் சீராட்டுகள் செய்து வெள்ளைசாமிக்கு வயலட்பிலோமினாவை சித்திரவேல் திருமணம் செய்து கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

6) ஆனால் சித்திரவேலை அவமானம் படுத்தும் விதமாக வயலட்பிலோமினா 1 வது வாதியுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல.குடும்பத்திற்கு அவமானத்தை ஏற்படுத்திய பெண்ணிற்கு சொத்தில் பங்கு கிடையாது என்றால் சரியல்ல.நாங்கள் முறை தவறி பிள்ளைகள் என்பதால் தபசில் சொத்தில் எங்களுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.வயலட் பிலோமினாவிற்கு சொத்தில் உரிமை இல்லாதபோது வாதிகளாகிய எங்களுக்கு அதில் உரிமை ஏற்படாது என்றால் சரியல்ல.

7) 1 வது வாதி முத்துமாரியப்பன் சகோதரியின் பெயர் முனியம்மாள் என்றால் சரியல்ல.சகோதரிகளின் பெயர் குருவம்மாள் மற்றும் லெட்சுமி. 1 வது வாதி முத்துமாரியப்பன் சகோதரியின் பெயர் முனியம்மாள் என்றாலும் அவர்களின் பெயர்கள் குருவம்மாள் மற்றும் லெட்சுமி கிடையாது என்றால் சரியல்ல.1 வது வாதியின் சகோதரி முனியம்மாள் என்றாலும் அவர் 1 வது அயிட்ட சொத்தில் மேற்புறத்தில் 3 செண்டில் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல.

8) அதை மனிதாபிமான அடிப்படையில் 5 முதல் 8 பிரதிவாதிகளும் அவர்களது தகப்பனார் சத்தியசீலனும் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றவில்லை என்றால் முனியம்மாள் என்பதே தவறு.1 வது ஆயிட்ட சொத்தில் நாங்கள் தான் வீடு கட்டியுள்ளோம் அதன் கதவு எண் 4/148.

9) அந்த வீட்டின் தீர்வை ரசீது,மின் இணைப்பு ரசீது ஆகியவற்றை நான் நீதிமனறத்தில் தாக்கல் செய்துள்ளேன்.4/148  என்ற கதவு எண் பற்றி தபசில்

சொத்தில் எங்கும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.வா.சா. ஆவணம் 10 க்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

10) சித்திரவேலின் தகப்பனார் பெயர் கருப்பசாமி தான் கருப்பனன் கிடையாது என்றால் சரியல்ல.இரண்டு பெயர்களும் உண்டு.வயலட் பிலோமினாவின் முதல் கணவர் வெள்ளைசாமியை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.அவர் வேறு திருமணம் முடித்து பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார்.வெள்ளைசாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை.வழக்கில் வெள்ளைசாமிக்கும் வயலட்பிலோமினாவிற்கும் குலவழக்கம் படி விவகாரத்து நடந்த பின்னர் 1 வது வாதிக்கும் வயலட்பிலோமினாவிற்கும் திருமணம் நடந்தது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை.

11) வெள்ளைசாமியை வழக்கில் கட்சி சேர்த்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவரை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.அதனால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை கட்சி சேர்க்காத தோஷத்தால் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.தபசில் சொத்து கூட்டு அனுபத்தில் உள்ளதாக பொய்யாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.கூட்டுறவு சங்கத்தில் சித்திரவேல் கடன் வாங்கியதாக சொல்லப்பட்டது என்ன ஆனது என்றால் மேற்படி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.அதற்குரிய ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

12)சித்திரவேல் 2005 ஆண்டுக்கு முன்பே இறந்துவிட்டார் என்பதாலும் என் தாயார் வயலட்பிலோமினாவிற்கு 1976 ல் முதல் திருமணம் நடந்துள்ளதாலும் அவருக்கு சொத்தில் பங்கு கிடையாது என்றால் சரியல்ல.

13) என் தகப்பனாரின் சகோதரி முனியம்மாள் ஏற்படுத்திய ஆக்கிரமிப்பை அகற்றியதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 1 வது வாதியின் சகோதரி பெயர் முனியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதை மறுத்து நானோ 1 வது வாதியோ எங்களது நிரூபண வாக்குமூலத்தில் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.எங்களுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

**இல்லை.**

(பிரதிவாதிகளின் தரப்பு குறுக்குவிசாரணை முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.